# திருக்குறள் மொழிபெயர்ப்பு சில சிந்தனைகள்

வெ. ராஜேஸ்வரி

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழிக்கும் மற்றொரு மொழிக்குமான உறவுநிலையே, அங்ஙனமே பிரதி எடுப்பதோ, பொழிப்புரை தருவதோ, போலச் செய்வதோ தகாது. ஒரு மொழியிலுள்ள மூலப்பகுதிக்கு ஈடாக மற்றொரு மொழியினைப் பயன்படுத்தி அச்செய்தியினை வெளிப்படுத்தும் செயற்பாங்கே மொழிபெயர்ப்பு என்பர். சுருங்கக் கூறவேண்டுமெனில், மொழிகளுக்கிடையே நடைபெறும் செய்திகளின் பரிமாற்றமே (Transposition) மொழிபெயர்ப்பாகும்.

'மொழிபெயர்ப்பு என்பது மூலத்தின் பிறிதொரு வடிவமே இதுவும் ஒரு கண்டுபிடிப்பே' எனும் கூற்றின் அடிப்படையில் ஒரு திருக்குறளுக்கான (எண் 1083) கவிதைநடை மொழிபெயர்ப்புகள் மூன்றனை ஆராயுங்கால் மொழிபெயர்ப்பு குறித்த பல்வேறு கருத்துக்கள் தோன்றுகின்றன. அவற்றைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கும் போக்கும் ஆம்.

பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனியறிந்தேன்
பெண்தகையாள் பேரமர்க் கட்டு (1083)

என்பது 'தகையணங்கு உறுத்தல்' எனும் அதிகாரத்தில் இடம்பெறும் மூன்றாம் குறட்பா. 'தலைவியின் வனப்பு தலைவனை வருத்தமுறச் செய்தல்' என்பது இவ்வதிகாரத்தின் பொருள் ஆகும்.

'கூற்றென்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டலல்லது, கண்டறியேன். இப்பொழுது பெண்தன்மையுடன் போரிடுகின்ற பெரிய கண்களை உடைய இவளது உருவில் கண்டு அறிந்தேன்' எனத் தலைவன் நவில்வதாக அமைகிறது பாடற்பொருள்.

இக்குறளுக்கான ஆங்கில மொழிபெயர்ப்புகள் வருமாறு:

Death's form I formerly
knew no; but now't is plain to me;
He comes in lovely maiden's guise,
with soul – subduing eyes.

(G.U. Pope)

Not known before – I Spy Demise
In women's guise with battling eyes

(Yogi Sundhanandha Bharathi)

I have not known Yama before, but now I see his form,
which hath two bigh and battiling eyes and female
Virtue's charm!

(K.M. Balasubramaniyam)

இம்மொழி பெயர்ப்புகளின் தன்மையை இனிக் காண்போம்.

'பண்டு அறியேன்' எனும் சிறுதொடருக்கு ஜி.யு. போப் 'I formerly knew not' என்றும் யோகியார் 'Not known before – I' என்றும், கே.எம்.பி 'I have not known before' என்றும் மொழிபெயர்த்துள்ளனர். 'know' என்ற சொல்லைக் காட்டிலும் 'saw' எனும் சொல் பொருத்தமுடைத்து எனத் தோன்றுகிறது. 'பண்டு கேட்டறிந்ததுண்டு; கண்டறிந்ததில்லை' எனும் பொருளை நோக்க 'saw' எனும் சொல்லே ஏறகத்தகுந்த இயக்கமிகு நிகரனாக உள்ளது. இதுபோன்றே 'before' எனும் சொல்லைக் காட்டிலும் 'formerly' எனும் சொல் நலமிகுந்ததாகக் கொள்ளத்தக்கது.

'கூற்று' எனும் சொல்லுக்கு பரிமேலழகர் 'யமன்' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. ஒருவேளை அவர்காலத்தில் அச்சொல் வழக்கில் இல்லாமல் இருந்திருக்கலாம். பிற்கால உரையாசிரியர்கள் 'எமன்' எனும் பொருள் தருகின்றனர்.

கே.எம்.பி. 'எமன்' எனும் சொல்லை 'Yama' என ஒலிபெயர்த்துத் தந்துள்ளார். பிறமொழி வாசகனுக்கு இதன் பொருள் புரியாது போகலாம். இச்சிக்கலை ஒரோவழி

சமாளிக்க போப் ‘Death’ எனும் சொல்லையும், யோகியார் ‘Demise’ எனும் சொல்லையும் பயன்படுத்தியுள்ளனர். ‘Demise’ என்பதும் ‘Death’ எனும் பொருளையே தரும். யோகியார் பிரெஞ்சு அளவை முறையைப் பயன்படுத்தி ‘டெட்ராமெட்ரிக்’ எனும் நாற்சீர் கொண்ட கவிதையாகக் குறளை மொழிபெயர்த்துள்ளார். இயைபு நலம் கருதியே ‘Death’ எனும் சொல்லுக்கு நிகரான ‘Demise’ எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் எனக் கருத இடமுண்டு.

இனி மொழிபெயர்ப்புகளில், ‘பெண்தகை’ எனும் சொல்லுக்கான நிகரன்கனை ஆய்வோம். பெண்தகை என்னும் சொல் அச்சம்-நாணம்-மடம்-பயிர்ப்பு என்னும் குணங்களை உடையவளைக் குறிக்கும். இதற்கு இணையாக ஆண்களின் சிறப்பை உணர்த்த ஆண்தகை எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதனை இராமாயணம் கொண்டும் உய்த்துணரலாம். ‘தகு’ எனும் பகுதி ‘தகவு’ எனப் பெயராய் நிற்கும். ‘தகவு’ என்பது ‘நடுநிலைமை’யைச் சுட்டும். ‘தகவு – கிருபை’ என்பது பழையவுரை என்றும் கம்பராமாயண உரைநூலார் சுட்டுவார். ‘ஆண்தகை’ எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதனை இராமாயணம் கொண்டும் உய்த்துணரலாம். ‘தகு’ எனும் பகுதி ‘தகவு’ எனப் பெயராய் நிற்கும். ‘தகவு’ என்பது ‘நடுநிலைமையைச் சுட்டும். ‘ஐ’ எனும் விகுதி பெற்ற பகுதி ‘தகை’ எனப் பெயராகும். இது அன்பு, அழகு, குணம், மேம்பாடு எனப் பலபொருட்களை உணர்த்துவதாகும். ‘தகவு – கிருபை’ என்பது பழையவுரை என்றும் கம்பராமாயண உரைநூலார் சுட்டுவர். ‘ஆண்தகை’ எனும் சொல் ‘ஆடவரிற் சிறந்தவன்’ எனும் பொருளில் கம்பராமாயணத்தில் பல இடங்களில் பேசப்படுகிறது.

இச்சொல்லை ‘which hath female virtures charm’ என கே.எம்.பியும் ‘lovely maiden’s guise’ என போப்பும், ‘women’s guise’ என யோகியாரும் மொழிபெயர்த்துள்ளனர். ‘பெண்தகை’க்கு மிக நெருங்கிய நிகரன்களாகக் கொள்ளதக்கவை ‘Female virtues charm’ (KMB) மற்றும் ‘lovely maidens guise; (Pope)ஆகியனவாம். ‘தகை’ எனும் சொல் அன்பைக் குறிப்பதைக் கொண்டும், அது இன்பம் பயக்கக்கூடியது எனக் கொண்டும் ‘lovely maidens guise’ எனப் போப் கூறினார் போலும்!

‘Virtue means ‘excellence & goodness’; charm means ‘pleasing quality of feature’ எனக் கொண்டும் மொழிபெயர்த்திருப்பது ஆற்றல் மிகுந்ததும் அழகானதுமான நிகரனே! ஒரு சொல்லுக்கு சிறுதொடர் நிகரான அமைந்த வகையில் இது அடங்கும். ‘பேரமர்க்கட்டு’ (பெரிய போர்செய்யும் கண்கள்) என்பதனை ஒரே தொடராகக் கொண்டு அதற்கான நிகரன்களைக் காண்போம்.

‘soul subduing eyes’ என ஜி.யு. போப் மொழிபெயர்த்திருப்பது பெண்தகையாள் இன்பம் தரவேண்டுதலை விடுத்து துன்பம் மிகுவிக்கின்ற தன்மையை, மூலத்தின் உள்ளார்ந்த நிலையை நன்கு உணர்த்தும் முழுமையான மொழிபெயர்ப்பாக உள்ளது. ‘Battling’ என யோகியார் மொழிபெயர்த்ததில் பெரிய எனும் கண்ணின் தன்மை விடுபட்டுப்போகிறது. இது முறைசார் நிகரனே! ‘two big and battling eyes’ என கே.எம்.பி மொழிபெயர்த்துள்ளார். ஈண்டு ‘big’என்பதற்கு பதிலாக ‘large’ என இடடிருப்பின் மேலும் சிறக்கும்.

மேற்சுட்டப்பட்ட மூன்று மொழிபெயர்ப்புகளும் செய்யுள்வடிவில் எழுந்தவை. கவிதை மொழிபெயர்ப்புக்கு உள்ள கட்டுப்பாடு உரைநடையில் இல்லை. கவிதையைக் கவிதையாகவே மொழிபெயர்க்கும்போது அதன் அமைப்பிலும், ஒலி இயைபிலும் அதிகக் கவனம் செலுத்த முற்படுகிறார். மொழிபெயர்ப்பாளர். இதானல் மூலத்தின் கருத்தில் சிதைவு – மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. யாப்பினை நிறைவு செய்ய சிலவற்றைச் சேர்க்கவோ, விடுக்கவோ நேரிடுகிறது. இதனால் கருத்துக்களை ஓர் எல்லைக்குட்பட்டே சொல்லும் நிர்பந்தம் ஏற்படுகிறது.

கூற்றைக் ‘கண்டறிந்தேன்’ என்பதற்கு ‘now’t is plain to me’ என போப் மொழிபெயர்த்திருப்பது ‘அறிவால் உணர்த்தல்’, கண்ணால் பார்த்து உணர்தல்’ என்ற

தெளிவு நிலையைக் காட்டும் சிறந்த மொழிபெயர்ப்பு. மொத்தத்தில், இதனை 'நிறைவமை மொழிபெயர்ப்பு' (Communicative Translation) எனக் கூறலாம். யோகி சுத்தானந்த பாரதியார் யாப்பினை நிறைவு செய்ய 'spy' என்னும் சொல்லைச் சேர்த்தும், 'பெரிய' எனும் கண்ணின் தன்மையைக் கூறாது விடுத்தும் எழுகிறார். இது 'போன்மை மொழிபெயர்ப்பு' (Imitation) எனலாம். எனினும் அக்குறையை ஈடுசெய்கின்ற வகையில் அழகுணர்ச்சி மிளிர்வது உண்மை. கே.எம். பாலசுப்பிரமணியம் 'two' எனும் சொல்லை தேவையற்ற சேர்க்கை (Pandding) யாகப் பயன்படுத்துகிறார். இது சிறு குறையே. மற்றபடி இவரது மொழிபெயர்ப்பும் நிறைவானதே ஆம்!. மேற்கண்ட மொழிபெயர்ப்புகள் சில குறைகளைத் தன்னகத்தே கொண்டிருப்பினும், அவை முயற்சி கருதி போற்றத்தக்கன. மூலப்பனுவலை மூலவராகவும், மொழிபெயர்ப்புப் பனுவலை உற்சவராகவும் உருவகித்துப் பேசுவார் சேக்கிழார் அடிப்பொடி டி. என். ராமச்சந்திரன். மூலவர் நிலையானவர் சென்று காண்பவர் மட்டமே அதன் அழகை உய்த்துணரமுடியும். ஆனால் உற்சவர் மூலவரின் பிரதிநிதியாய் எல்லோரையும் தானே நாடி வருவர். மூலவரும் உற்சவரும் உருவத்தால் தன்மையால் வேறுபட்டவர்கள். இதுபோலத்தான் மூலவரும் மொழிபெயர்ப்பும் உற்சவரால் அனைவருக்கும் இன்பம் கிடைப்பது போல பயன்தருவதே இலக்கியம். இது எல்லோராலும் பாராட்டப்படும் தன்மையுடையது. முற்கண்ட மொழிபெயர்ப்புகள் மூலத்தை விஞ்சி அமையவில்லை என்றாலும், மூலத்தின் கருத்தை – சிறப்பை மக்களுக்க இனம் காட்டுவனவாய் அமைந்துள்ளன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

1. **Communicative translation**: It seeks to achieve the same effect on the readers of the SL and TL. Its quality can sometimes be over better than that of the original.
2. **Padding:** Words not in the original added to balance a line on the metrical level or to supply the all imported rhyme world.